சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 14.08.2018

அவசரக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் ஆடி மாதம் 29–ம் நாள் (ஆகஸ்ட் திங்கள் 14–ம் நாள்:–14.08.2018) செவ்வாய் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சியில் உள்ள வார்டு எண்.1 முதல் 27 வரையிலான வார்டுகளில் சேகரம் செய்யும் குப்பைகளை அப்பகுதிகளிலேயே பிரித்தெடுத்து உரம் தயாரிக்கும் பணியினை மேற்கொள்வதற்கு மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் (Micro Compost Centre) வாரச்சந்தையின் தெற்குப் பகுதியிலும் மற்றும் சாமிகுளத்திலும் கட்டும் பணிக்கு ரூ.112.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.366, நாள்.18.05.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

தற்பொழுது சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் 13.08.2018ம் அன்று நடத்தப்பெற்ற 7வது மாநில உயர் அதிகார குழு கூட்டத்தில் (SHPC) மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் 2 எண்ணம் அமைக்கும் பணிக்கு முறையே ரூ.68.00 இலட்சம் மற்றும் ரூ.41.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.109.00 இலட்சம், முதன்மை குப்பை சேகரம் செய்யும் பணிக்கு டிப்பர் ஆட்டோ – 3 எண்ணம் (LCV) மற்றும் பேட்டரி ஆபரேட்டிங் கார் – 8 எண்ணம் வாங்குவதற்கு முறையே ரூ.16.80 இலட்சம் மற்றும் ரூ.14.40 இலட்சம் ஆக மொத்தம் ரூ.31.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி திடக்கழிவு மேலான்மை திட்டத்தினை செயல்படுத்தும் பணிக்கு ரூ.140.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்டவாறு ஒதுக்கீடு செய்து வரப்பெற்ற திட்ட மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்தவும், ஒதுக்கீட்டின்படி நிதியினை விடுவிக்கவும், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.7867/2015/இ1).**

**தீர்மான எண், நாள்** **441, நாள்.14.08.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் TN60S2751க்கு நான்கு எண்ணம் டயர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.410, நாள்.29.06.2018ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, இவ்வலுவலக ந.க.எண்.7057/2014/இ2, நாள்.02.07.2018ம் தேதிய விலைப்புள்ளி அறிவிப்பின்படி கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை (ரூ.பை) |
|---|---|---|
| 1. | சிவகேசா டயர்ஸ் | 25600/– |
| 2. | லெட்சுமி டயர்ஸ் | 26700/– |
| 3. | ஹாஜ் டயர்ஸ் | 27300/– |

**அலுவலகக் குறிப்பு:–** **வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் காணும் நிறுவனத்தின் குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7057/2014/இ2).**

**தீர்மான எண், நாள்** **442, நாள்.14.08.2018**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.3

மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உபயோகத்திற்கு மதுரை திருப்பதி ஆபீஸ் புராடக்ட் நிறுவனத்தில் ஜனவரி 2018 மாதத்தில் ஜெராக்ஸ் நகல்கள் எடுத்த வகையில் ஆன செலவு ரூ.3604/– (ரூபாய் மூன்றாயிரத்து அறநூற்று நான்கு மட்டும்) மேற்கண்ட நிறுவனத்திற்கு கேட்பு காசோலையாக எடுத்து வழங்க அறிவுறுத்தி வரப்பெற்றுள்ளது. கடித எண்.3183/2013/பி3, நாள். .06.2018ன்படி மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் ஈடு செய்யலாம்.<br>3. மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி கேட்பு காசோலை எடுத்து அனுப்பப்பட்டுள்ளதை மன்ற அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.2994/2018/இ2).** |
| **தீர்மான எண், நாள்** | **443, நாள்.14.08.2018.** |
| **தீர்மானம்** | |

*******

## பொருள் எண்.4

1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 124(1) உட்பிரிவு 2 மற்றும் 13ன்படி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தொழில்வரியினை 25 சதவிகிதத்திற்கு குறையாமலும் 35 சதவிகிதத்திற்கு மிகாமலும் உயர்வு செய்திட வேண்டும் என விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி, தொழில்வரி உயர்வு செய்து 5 வருடங்கள் முடிவடைவதால், 01.10.2018 முதல் தொழில்வரியினை சீராய்வு செய்வதற்கு தினமணி நாளிதழில் 14.06.2018–ல் விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக் கட்டணம் மற்றும் GST வரி சேர்த்து மொத்தம் ரூ.15271/– செலவின தொகை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | பதிவு செய்யலாம். (ந.க.எண்.5856/2018/அ1) |
| **தீர்மான எண், நாள்** | **444, நாள்.14.08.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN60W1755 என்ற டம்பர் பிளேசர் வாகனத்திற்கு புதிய டயர்கள் வாங்கும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **30.07.2018**ம் நாளன்று கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியவரின் விவரம் | பொருட்களின் விவரம் | தொகை ரூ.பை |
|---|---|---|---|
| 1. | ஹாச் டயர்ஸ், கதவு எண்.290, வார்டு எண்.17, LF ரோடு, கம்பம் | 1).8.25x16 Sigsotr (Tyre, Tube&Flap) 4 Nos (12875x4)<br>2). 8.25x16 SM 909 (Tyre, Tube&Flap) 2 Nos (11850x2) | ரூ.51500/–<br>ரூ.23700/– |
| | | **மொத்தம்** | **75200/–** |
| 2. | லெட்சுமி டயர்ஸ், 86, மெயின் ரோடு, சின்னமனூர் | 1).8.25x16 Sigsotr (Tyre, Tube&Flap) 4 Nos (12800x4)<br>2). 8.25x16 SM 909 (Tyre, Tube&Flap) 2 Nos (11750x2) | ரூ.51200/–<br>ரூ.23500/– |
| | | **மொத்தம்** | **74700/–** |

**அலுவலகக் குறிப்பு:–** **1. மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.2ல் காணும் லெட்சுமி டயர்ஸ், சின்னமனூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2136/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **445, நாள்.14.08.2018**

**தீர்மானம்**

*******

பொருள் எண்.6

இந்நகராட்சிக்குச் சொந்தமான நேருஜி பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலைய கடைகள், உணவகம் மற்றும் கட்டணக் கழிப்பறைகளை நகர்மன்றத் தீர்மான எண்.665, நாள்.18.07.2016ல் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்க முன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 21 கடைகள் மற்றும் 2 கழிப்பிடம் ஆகியவற்றினை 31.07.2018ம் தேதி மறு முன் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | கடை எண். | ஏலதாரர் / ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை (மாத வாடகை) |
|---|---|---|---|
| 1 | 14 | செ.அசோக்குமார், த/பெ.சு.செல்வராஜ், க.எண்.7, முத்துச்சாமி தெரு, சின்னமனூர் | 2150/– |
| | 14 | மு.குருசாமி, த/பெ.முத்தையா, கன்னிசேர்வைப்பட்டி, உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம் | 1700/– |
| 2 | 15 | அ.ஜெயா, க/பெ.எஸ்.அசோக்குமார், 20B, SAV பவனம், முத்துச்சாமி தெரு, சின்னமனூர் | 2200/– |
| | 15 | சு.தமிழன், த/பெ.சுருளித் தேவர், கிழக்குத் தெரு, கன்னிசேர்வைபட்டி, உத்தமபாளையம் தாலுகா | 2000/– |
| 3 | 16 | அ.அஜய்குமார், த/பெ.எஸ்.அசோக்குமார், 17,சாமிகுளம் முதல் தெரு, சின்னமனூர் | 2150/– |
| | 16 | அ.ஜெயா, க/பெ.எஸ்.அசோக்குமார், 20B, SAV பவனம், முத்துச்சாமி தெரு, சின்னமனூர் | 1900/– |

அலுவலகக் குறிப்பு:– **1. 31.07.2018ம் நாள் நடைபெற்ற 21 கடைகள் மற்றும் கட்டணக் கழிப்பறைகளுக்கு மறு முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 3 கடைக்கு மட்டுமே வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி கோர முன் வந்துள்ளனர். இதர இனங்களுக்கு எவரும் ஏலம் கோர முன்வரவில்லை.**

**2. மேற்கண்ட 3 கடைக்கு மட்டும் வைப்பும் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி மட்டும் கொடுத்துள்ளனர். எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. மேற்படி கடைகளுக்கு கொடுத்துள்ள உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம். (ந.க.எண்.370/2017/அ2).**

தீர்மான எண், நாள் **446, நாள்.14.08.2018**

தீர்மானம்

*******

**பொருள் எண்.7**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான நேருஜி பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள மீதம் உள்ள 21 கடைகள் மற்றும் 2 கட்டணக் கழிப்பறைகள் மறு முன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கை மேற்கொள்ள விளம்பர கட்டணத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.100000/—க்கு (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர ஆகும் விளம்பரக் கட்டணத்திற்கு உத்தேச செலவினம் ரூ.100000/—க்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.370/2017/அ2)** |
| **தீர்மான எண், நாள்** | **447, நாள்.14.08.2018** |
| **தீர்மானம்** | |

*******